# <u>மாதாந்த சபைக்கூட்ட அறிக்கை – ஜனவரி - 2023</u>

## <u>வவுனியா வடக்கு பிரதேச சபை</u>

இடம் :- மாநாட்டு மண்டபம், வவுனியா வடக்கு பிரதேச சபை.

காலம் :- 25.01.2023 (புதன்கிழமை)

நேரம் :- காலை 10.00 மணி

**இக்கூட்டத்தில் கீழ்வரும் கௌரவ உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.**

1. கௌரவ தவிசாளர் தர்மலிங்கம் பார்த்தீபன்
2. கௌரவ உறுப்பினர் ஜெயக்கொடி ஜெயரூபன்
3. கௌரவ உறுப்பினர் நடராஜா விநாயகமூர்த்தி
4. கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன்
5. கௌரவ உறுப்பினர் சிவஞானம் அருள்செல்வம்
6. கௌரவ உறுப்பினர் மயில்வாகனம் செந்தூரன்
7. கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா
8. கௌரவ உறுப்பினர் உடகெதர ஆராச்சிலகே மஹிந்த குலரத்ன
9. கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோச்சனா
10. கௌரவ உறுப்பினர் கப்புவாகே விமலசிறி
11. கௌரவ உறுப்பினர் வீ.ஆ.நிஷாந்தி பிரதீபிகா குமாரி
12. கௌரவ உறுப்பினர் ஜயசுந்தர முதியன்சலாகே குணதிலக பண்டார
13. கௌரவ உறுப்பினர் பிமல் தர்மதாச
14. கௌரவ உறுப்பினர் ரஞ்சினி ஜெயகரன்
15. கௌரவ உறுப்பினர் உயன்வத்தேகெதர விஜேதுங்க
16. கௌரவ உறுப்பினர் ந.வ.ஆ.நிஷாந்தகாமினி விக்ரமபால,
17. கௌரவ உறுப்பினர் ரத்நாயக்க முதியன்சலாகே காந்திலதா,
18. கௌரவ உறுப்பினர் நா.ந.அருண சாந்த பிரியதர்சன
19. கௌரவ உறுப்பினர் பரமசிவம் பரத்,
20. கௌரவ உறுப்பினர் விநாயகமூர்த்தி சஞ்சுதன்
21. கௌரவ உறுப்பினர் நடனறதனி யோகநாதன்
22. கௌரவ உறுப்பினர் ஆறுமுகம் அகிலேஸ்வரன்

வவுனியா வடக்கு பிரதேச சபையின் ஐம்பத்தெட்டாவது மாதாந்த சபைக்கூட்டமானது சபையின் மாநாட்டு மண்டபத்தில் 25.01.2023 ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணியளவில் கௌரவ தவிசாளர் தர்மலிங்கம் பார்த்தீபன் அவர்களது தலைமையில் அகவணக்கத்துடன் ஆரம்பமானது.

கௌரவ தவிசாளர் தனது தலைமையுரையில், சபையின் கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், செயலாளர், மொழிபெயர்ப்பாளர் மற்றும் சபை அலுவலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொண்டார். தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களால் கடந்த மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட

நடவடிக்கைகள், முன்னேற்றங்கள் பற்றி தவிசாளரால் சபைக்கு தெளிவுபடுத்தப்பட்டது. பின்னர் கீழ் வரும் விடயங்கள் சபையினால் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/01/58/01**

கூட்டத்தில் கலந்துகொள்ளாத உறுப்பினர்கள் தொடர்பில், சபையின் கௌரவ உபதவிசாளர் நாகலிங்கம் யோகராஜா, கௌரவ உறுப்பினரான விஜேகோன் முதியன்சேலாகே எரந்தி குமாரி, கௌரவ உறுப்பினர் பொன்னையா தேவராசா, கௌரவ உறுப்பினர் தேவராஜா ஜேசுதாகர் அவர்கள் சுகவீனம் காரணமாக இன்றைய கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாதென அறிவித்துள்ளதன் அடிப்படையில் மருத்துவ காரணங்களுக்காக அவர்களது விடுமுறையை ஏற்றுக்கொண்டு அங்கீகரித்தல் என தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோசனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/01/58/02**

கடந்த மாத கூட்டறிக்கை அங்கீகரித்தல் தொடர்பில், கடந்த 2022 டிசம்பர் மாத கூட்டறிக்கையில் எவ்வித திருத்தங்களும் இல்லாத நிலையில் குறித்த கூட்டறிக்கையினை சரியென ஏற்று அங்கீகரித்தல் என தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தை கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் நடனறதனி யோகநாதன் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/01/58/03**

கடந்த மாத கணக்கறிக்கை அங்கீகரித்தல் தொடர்பில் 2022 டிசம்பர் மாத கணக்கறிக்கை ஆராயப்பட்டது. இதன்போது வரவு - செலவு விடயங்கள் தொடர்பில் செயலாளர் அவர்களால் விளக்கம் அளிக்கப்பட்டது. இதனடிப்படையில் 2022 டிசம்பர் மாத கணக்கறிக்கையானது சரியென ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இத்தீர்மானத்தை கௌரவ உறுப்பினர் நடராஜா விநாயகமூர்த்தி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கப்புவாகே விமலசிறி அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/01/58/04**

நெடுங்கேணி நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள வன்னி பாரம்பரிய அறுஞ்சுவை உணவகத்தினை உள்ளூர் உற்பத்தி உணவுப்பொருட்களான மரக்கறிவகைகள், தானியங்கள், பழங்கள், பால் உற்பத்திப்பொருட்கள் மற்றும் சிறுகைத்தொழில் உற்பத்திப்பொருட்கள் என்பனவற்றை கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்வதற்கான இடமாக அமைப்பதற்கு " Cargils Food City" நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கும்படி கோரப்பட்ட கடிதம் சபையில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது. இவ் உணவகக் கட்டடம் பயன்பாடற்ற நிலையில் காணப்படுவதாலும், உள்ளூர் விவசாயிகள் உள்ளூர் உற்பத்திகளை நியாயமான முறையில் விற்று பயனடைய வாய்ப்புள்ளமையினாலும் உள்ளூர் உற்பத்தகளுக்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கக்கூடிய வாய்ப்பு உள்ளமையையும் வேலை வாய்ப்புக்கான சாத்தியப்பாடு உள்ளமையாலும் மக்களின் வாழ்வாதாரத்தில் இயலளவை உயர்த்தும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளமையாலும் மாதாந்த துத்தகை

அடிப்படையில் வழங்குவதற்கு கீழ்வரும் நிபந்தனை அடிப்படையில் வழங்குவதெனவும் சபையால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

1. மாதாந்த குத்தகை ரூபா 50,000.00, பெற்றுக்கொள்ளல்
2. பாதுகாப்புப்பிணைப்பணம் ரூபா 600,000.00, (ஒரு வருட வாடகை) பெற்றுக்கொள்ளல்
3. ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை ஒப்பந்தம் புதுப்பித்தல்,
4. ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை வாடகை புதுப்பித்தல்,
5. தண்ணீர், மின்சாரக் கட்டணங்கள் ஒப்பந்தகாரர்களால் செலுத்துதல்,
6. மேற்படி நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தம் மேற்கொள்ளல்.

இத்தீர்மானத்தை கௌரவ உறுப்பினர் ஜயசுந்தர முதியன்சலாகே குணதிலக பண்டார அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோச்சனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது

**தீர்மான இல :- VNPS/2023/GM/01/58/05**

சபையின் நிலையியற் குழுக்கள் தெரிவு செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு இன்னும் இரண்டு மாதங்களே உள்ளமையினால் ஏற்கனவே அமைக்கப்பட்ட விபரப்படி குழு அமைப்பதுடன் தற்போது சபையில் அங்கம் வகிக்காத உறுப்பினர்களின் பெயரை நீக்கி அதற்குப்பதிலாக நியமிக்கப்பட்டவர்களின் பெயரை உள்வாங்கி நடைமுறைப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

- **நிதி மற்றும் கொள்கை உருவாக்கல் குழு**
  - 01. கௌரவ தவிசாளர் தர்மலிங்கம் பார்த்தீபன் - குழுவின் தலைவர்.
  - 02. திருமதி சோதிநாயகி மணிவண்ணன் (சபை செயலாளர்) - குழுவின் செயலாளர்.
  - 03. கௌரவ உறுப்பினர் தேவராசா ஜேசுதாகர் - உறுப்பினர்.
  - 04. கௌரவ உறுப்பினர் நடராசா வினாயகமூர்த்தி - உறுப்பினர்.
  - 05. கௌரவ உறுப்பினர் கப்புவாகே விமலசிறி - உறுப்பினர்.
- **தொழில்நுட்பம் மற்றும் திட்டமிடல் குழு**
  1. கௌரவ தவிசாளர் தர்மலிங்கம் பார்த்தீபன் - குழுவின் தலைவர்.
  2. திரு கிருஸ்ணபிள்ளை முரளீதரன் (வுமு) - குழுவின் செயலாளர்
  3. திருமதி சோதிநாயகி மணிவண்ணன் (சபை செயலாளர்) - உறுப்பினர்
  4. கௌரவ உறுப்பினர் மயில்வாகனம் செந்தூரன் - உறுப்பினர்.
  5. கௌரவ உறுப்பினர் பிமல் தர்மதாச - உறுப்பினர்.
  6. கௌரவ உறுப்பினர் ஆறுமுகம் அகிலேஸ்வரன் - உறுப்பினர்.
- **சுகாதாரம் மற்றும் வாழ்வாதார வசதிகள் குழு**
  1. கௌரவ தவிசாளர் தர்மலிங்கம் பார்த்தீபன் - குழுவின் தலைவர்.
  2. திருமதி சோதிநாயகி மணிவண்ணன் (சபை செயலாளர்) - உறுப்பினர்
  3. கௌரவ உறுப்பினர் நடனறதனி யோகநாதன் - உறுப்பினர்.
  4. கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா - உறுப்பினர்.
  5. கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோசனா - உறுப்பினர்.

- **பெறுகைக் குழு (Procurement Committee)**

| இல | பெயர் | பதவி | குழுநிலைப் பதவி |
|---|---|---|---|
| 01. | கௌரவ தர்மலிங்கம் பார்த்தீபன் | தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேச சபை. | தலைவர் |
| 02. | திருமதி சோதிநாயகி மணிவண்ணன் | செயலாளர், வவுனியா வடக்கு பிரதேச சபை. | உறுப்பினர் |
| 03. | திரு ந.கவிராஜ் | கணக்காளர், வவுனியா வடக்கு பிரதேச செயலகம். | உறுப்பினர் |

- **தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (Technical Evaluation Committee – Works)**

| இல | பெயர் | பதவி | குழுநிலைப் பதவி |
|---|---|---|---|
| 01. | திரு. .சுதன் | பொறியியலாளர், வீதி அபிவிருத்தி திணைக்களம், வவுனியா. | தலைவர் |
| 02. | திரு ஆ.நித்தியகுமார் | கணக்காளர், நகரசபை, வவுனியா | உறுப்பினர் |
| 03. | திரு ளு.வாகீசன் | படவரைஞ்ஞர்இ பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அலுவலகம், வவுனியா | உறுப்பினர் |

- 500,000.00 ரூபாவுக்கு உட்பட்ட கொள்வனவுகளுக்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு

| இல | பெயர் | பதவி | குழுநிலை பதவி |
|---|---|---|---|
| 01 | ம.சிவகுமார் | தொழில்நுட்ப உத்தியோகத்தர், நகரசபை, வவுனியா | தலைவர் |
| 02 | கு.கோபிரஞ்சன் | தொழில்நுட்ப உத்தியோகத்தர், வவுனியா வடக்கு பிரதேச சபை | உறுப்பினர் |
| 03 | த.தனுராஜ் | சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர். | உறுப்பினர் |

இத்தீர்மானத்தை கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் ஜெயக்கொடி ஜெயரூபன் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/01/58/06**

சபையின் சாரதிகளுக்கு மேலதிக நேர கொடுப்பனவினை வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டது. இது தொடர்பில் கனரக வாகன சாரதிகள் மற்றும் தவிசாளரது வாகன சாரதி ஆகியோருக்கு 100 மணித்தியாலங்களும் ஏனைய சாரதிகளுக்கு 80 மணி நேரமும், அலுவலகம் தொடர்பான உத்தியோகத்தருக்கு 60 மணி நேரமும் மேலதிக நேர கொடுப்பனவு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் வினாயகமூர்த்தி சஞ்சுதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பொன்னையா தேவராசா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/01/58/07**

LDSP PT-II-01 வேலைத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட நெடுங்கேணி மரக்கறிச்சந்தை அமைத்தல் வேலைத்திட்டத்திற்குரிய இரண்டாம் கட்டக்கொடுப்பனவு ரூபா 2,306,372.00 வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோசனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா அவர்கள் வழிமொழிந்தார்.

**தீர்மான இல :- VNPS/2023/GM/01/58/08**

சபையின் உத்தியோகத்தரான திரு.யோ.செந்தூரன், செல்வி.ஞா.மேரிஜெனிரா ஆகியோர் இடருதவி கடன் கோரியுள்ளனர். அவர்களுக்கான இடருதவிக் கடனினை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர பரணீதரன் ஜமுனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோசனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/01/58/09**

கனகராயன்குளம் மரக்கறிச்சந்தையை குத்தகைக்குப்பெற்றவரால் வியாபாரத்திலீடுபடுபவர்களுக்கு நாளொன்றிற்கு அதிகபட்சமாக ரூபா 1,000.00 மட்டும்தான் அறவிடமுடியும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் ஜெயக்கொடி ஜெயரூபன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன் அவர்கள் வழிமொழிந்தார். இத் தீர்மானத்தினை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/01/58/10**

எமது சபையால் முன்னெடுக்கப்படும் சட்டம் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புள்ள ஏனைய விடையங்கள் தொடர்பான சட்டம்சார் விடயங்களுக்கு ஓர் சட்டத்தரணியை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் நடராஜா விநாயகமூர்த்தி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சிவஞானம் அருள்செல்வம் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/01/58/11**

எமது சபையின் தீயணைப்புக்கருவிகள் காலாவதியாகியுள்ளதால் அதனைக் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் ஜெயக்கொடி ஜெயரூபன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் வினாயகமூர்த்தி சஞ்சுதன் அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

**தீர்மான இல :- VNPS/2023/GM/01/58/12**

எமது சபையால் LDSP திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட நெடுங்கேணி கடைகளில் ஒரு கடைக்கான மதிப்பிடப்பட்ட மாதாந்தம் ரூபா 6,000.00 வாடகையாக 20 வருடத்திற்கான வாடகையை ஒரே கொடுப்பனவாக ரூபா 1,500,000.00 ஆரம்ப கேள்வித்தொகையாக கேள்விகோருவதென்றும் கனகராயன்குளம் கடைக் கட்டடத்தின் ஒரு கடைக்கான மதிப்பிடப்பட்ட மாதாந்தம் ரூபா 4,500.00 வாடகையாக 20 வருடத்திற்கான வாடகையை ஒரே கொடுப்பனவாக ரூபா 1,000,000.00 ஆரம்ப கேள்வித்தொகையாகவும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் சசீந்திரன் இராஜசிலோச்சனா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பரணீதரன் ஜமுனா அவர்கள் வழிமொழிந்தார். இதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

மேலும் சென்ற மாதக் கூட்டத்தில் கௌரவ உறுப்பினர் நடனறதனி யோகநாதன் அவர்களால் கோரப்பட்ட கோரிக்கையை நினைவுபடுத்தி கருத்துத்தெரிவித்தார் வீதி விளக்குகள் பூட்டப்பட்டு வருடங்களாகுகின்றது அவை ஒளிர்வதில்லை என்றார் இதனால் போக்குவரத்துப் பிரச்சினையாகவுள்ளது அத்துடன் யானைக்காடு யானை நடமாட்டம் உள்ள பிரதேசமாகையால் இதனைச் சீர்செய்து தருமாறு கோரினார்.

கௌரவ தவிசாளர் அவர்களால் நெடுங்கேணி நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள வன்னி பாரம்பரிய அறுஞ்சுவை உணவகத்தினை குத்தகைக்கு கோரியவர்களால் இதுவரையில் எவ்வித செயற்பாடுகளையும் எடுக்காத வகையில் கணக்காய்வு ஐயவினாவாக கேட்கப்பட்டிருந்தது. ஆனால் உள்ளூர் உற்பத்தி உணவுப்பொருட்களை கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்வதற்கான இடமாக அமைப்பதற்கு " Cargils Food City" நிறுவனத்தினர் குத்தகை அடிப்படையில் வன்னி பாரம்பரிய அறுஞ்சுவை உணவகத்தினை தருமாறு கோரியுள்ளனர். உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் ஆலோசனைக்கமைவாகவும், மேற்படி நிறுவனத்திற்கு வழங்க ஆலோசனை வழங்குமாறு சபையில் கோரினார்.

கௌரவ உறுப்பினர் சோமசுந்தரம் சத்தியேந்திரன் அவர்களால் " Cargils Food City" நிறுவனத்தினர் உள்ளூர் உற்பத்தி உணவுப்பொருட்களை கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்வதற்கான இடமாகவா? அல்லது விற்பனை செய்யுமிடமுமா? எனக்கேட்டார். கௌரவ தவிசாளர் அவர்களால் உள்ளூர் உற்பத்தி உணவுப்பொருட்களை கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்வதற்கான இடமாகதான் வழங்கலாம் என்றார்.

தொடர்ந்து ஏனைய விடயங்கள் ஏதும் இல்லாமை காரணமாக நன்றியுரையுடன் பிற்பகல் 2.10 மணியளவில் கூட்டம் நிறைவடைந்தது.

| | |
|---|---|
| ………………… | …………………. |
| செயலாளர், | தவிசாளர், |
| வவுனியா வடக்கு பிரதேச சபை, | வவுனியா வடக்கு பிரதேச சபை. |
| நெடுங்கேணி. | நெடுங்கேணி. |